2015 மார்ச் 31]

**99—**

## ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

***2749—திருமதி எஸ். கணிதா சம்பத்:**

*மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகம் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

*ஜனநாயகத்தின் தூண்களில் முக்கிய தூணாக விளங்கும் நீதித் துறையில் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்கும் வகையில், புதிய நீதிமன்றங்களையும், நீதிமன்றங்களுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளையும், நீதிபதிகளுக்குத் தேவையான குடியிருப்பு வசதிகளையும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு ஏற்படுத்தித் தந்துள்ளார்கள்.*

*மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.375 கோடி மதிப்பீட்டில் புதிய நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் போன்ற நீதித் துறைக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்த ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேலும், நிலுவையில் உள்ள வழக்குகளைக் குறைத்திட ரூ.134 கோடி மதிப்பீட்டில் 169 புதிய நீதிமன்றங்களை அமைத்திடவும் மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒப்புதல் வழங்கியுள்ளார்கள்.*

*2014-2015 ஆம் நிதியாண்டில் மட்டும் புதிய நீதிமன்றக் கட்டடங்கள், குடியிருப்புகள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ரூ.168 கோடியே 22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து சாதனை*

படைத்துள்ளார்கள் என்பதை மிகவும் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியிலே காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் நீதிபதிகளுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு மக்களின் முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூ.9 கோடியே 26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அரசாணை எண் 873, உள் துறை, நாள் 28-11-2014-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் மற்றும் குடியிருப்புகள் கட்ட பொதுப் பணித் துறையால் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவில் துவங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், இருக்கையில் இல்லை.

வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**100—**

### கால்நடைக் கிளை நிலையம்

***52753—திரு. கே.பி.பி. பாஸ்கர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாமக்கல் தொகுதி, கதிராநல்லூர் ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.